மண்முனை பிரதேச சபை – 2017, மட்டக்களப்பு
-----------------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்
--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்
---------------------------------------

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள;s அபிப்பிராயம;
-------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனைப் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்
-------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்
----------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 191,400 பெறுமதியில் கணனிகள் கொள்வனவு செய்ததாக குறிப்பிட்டு முறையே வரவும் செலவும் காட்டப்பட்டிருந்தது. ஆயினும் சபையினால் கணனிகள் எதுவும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் JCB வாகனத்தை வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக முறையே ரூபா 59,280 மற்றும் ரூபா 1,040,225 பணம் வருமானமாக கிடைக்கப் பெற்றிருந்தும் அதே ஆண்டுகளில் வருமான செலவு கணக்கில் காட்டுவதற்கு பதிலாக வைப்பு கணக்கில் மீளாய்வாண்டிலும் காட்டப்பட்டு வருகின்றது.

(இ) மீளாய்வாண்டில் கிறவல் வீதி அமைப்பு மற்றும் கொங்கிறீட் பாதையிடலுக்கான செலவு ரூபா 3,174,931 வருமான செலவு கணக்கில் ஆக்கப் பொருள் செலவினமாக காட்டுவதற்கு பதிலாக ஐந்தொகையில் நிலையான சொத்து கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) பொதுமயானத்திற்காக காணியொன்றை சுவீகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,400,000க்கு பிரதேச செயலாளருக்கு வரையப்பட்ட காசோலை ஒன்று வழங்கப்படாமலும் குறித்த காணி உரிமை மாற்றம் செய்யப்படாமலும் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் அத்தொகை சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது நெல்சிப் திட்டத்தின் கீழ் ரூபா 550,672 இற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தளபாடக் கணக்கின் கீழ் காட்டுவதற்கு பதிலாக நூலகக் கட்டிடக் கணக்கின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

1.3.2 பெறவேண்டியவை மற்றும் செலுத்தவேண்டியவை

1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக மின் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மற்றும் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய முறையே ரூபா 781,370 மற்றும் ரூபா 1,958,631 தொகையை அறவிடுவதற்கு மற்றும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் X இன்பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன்பிரிவு 197 | ஒவ்வொரு மாத முடிவிலும் நுகர்வு களஞ்சியப் பொருள் பதிவேடு செயலாளரினால் சோதனையிடப்பட்டு ஒப்பமிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி.இல. 1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,346,935 ஆகும். இதனொடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,923,090 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,423,845 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான முகாமைத்துவம்

நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டில் பெறவேண்டிய வாகன வாடகை நிலுவை ரூபா 990,095 வை பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசியல் தலைவர்களின் 2017 ஆவணி 20 ஆம் திகதிய மட்டக்களப்புக்கான விஜயத்தின் போது ஆரையம்பதியில் பாதைக்கு குறுக்காக வரவேற்பு பதாதை ஒன்று அமைப்பதற்காக சபையினால் ரூபா 239,950 செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் அரசியல் எதிர்ப்பு காரணமாக அவ் வரவேற்பு பதாதை 2018 யூன் 05 திகதி வரை பொருத்தப்படாமல் அதன் பாகங்கள் அலுவலக வளாகத்திலும் கலாச்சார மண்டப வளாகத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபையின் பூப்பந்தாட்ட உள்ளக அரங்கு மலசல கூடத்தினை திருத்துவதற்கு ரூபா 314,520 செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் இவ் வேலை தொடர்பாக மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் வேலை முடிவுற்றதன் அளவுகள் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------

பிரதேச சபை எல்லைக்குள் 06 நூல் நிலையங்கள் காணப்பட்ட போதிலும், நூலகர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியாக ஒன்று மாத்திரமே மீளாய்வாண்டுவரை காணப்பட்டிருந்ததுடன் ஆளணியினரை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எதுவும் சபையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை

3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

---------------------------------------

2015ஆம் ஆண்டின் பொது தேர்தலின் போது சபையின் உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டதற்காகவும் மற்றும் அதனோடு இணைந்த செலவாக ரூபா 85,322 சபை நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தும், சபையினால் உரிய காலத்தில் தேர்தல் திணைக்களத்திடமிருந்து இக் கொடுப்பனவை மீளப்பெற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------

கீழ் வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான மூலங்களை கண்டறிந்து வருமானங்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) கொடுப்பனவுகள் | கட்டுமான வேலைக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது உரிய அளவுச் சிட்டைகள் உறுதிப்படுத்தல்கள் மூலம் கொடுப்பனவு செய்தல் வேண்டும். |